நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.எம்.ஸ்ரீதர், பி.இ.,எம்.பிளான்

ந.க.எண். 710/2018 பெ.ம நாள்: 19.06.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017- 2.00ஏக்கர் 70செண்ட் (117612.00ச.அடி)பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்- தொடர்பாக.

பார்வை: 1)அரசாணை (நிலை)எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3) நாள்: 04.05.17.
2)அரசாணை (நிலை)எண்.172. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நவ4(3) நாள்: 13.10.17.
3)அரசாணை (நிலை)எண்.55. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நவ4(3) நாள்: 02.05.2018.
4)நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண்.13193/2017/எல்ஏ2. நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
5)மனுதாரர். திரு.P.அருமைதாஸ்,அவர்கள் விண்ணப்பம் நாள்: 23.04.2018.

....

**உத்தரவு:**

பார்வை (1) மற்றும் (2) மற்றும் (3)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (4)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (5)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், எளம்பலூர் கிராமம் ச.எண் 367/3-ல் 2.00 ஏக்கர் 70செண்ட் (117612.00ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு 127/2018பெ.ம என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | - 2.00 ஏக்கர் 70செண்ட் |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | - 31 Nos. |
| விற்கப்பட்ட மனை எண்கள் | - A1, A3, A4, A6-A8, A10, B1-B8,C1-C7 D1-D9 |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | - 10 Nos. |
| விற்கப்படாத மனைகளின் எண்கள் | - A2, A5, A9, B9, B10, C8, C9, C10, D10, D11 |
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு | - 1926.27ச.மீ |
| திறவெளி ஒதுக்கீடு (OSR)இடத்தின் பரப்பு | - 2564.25ச.அடி |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்:**

1)**பரிசீலணைக் கட்டணம்**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றுக்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் ( **12 மனைகள்)** | (ரூ. 6,000/-) |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2)**வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| வ.எண் | மனை எண் | பரப்பளவு ச.மீ | வரன்முறைக்கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30 ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக்கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1 | A2 | 222.96 | 6688.80 | 5574.00 |
| 2 | A5 | 222.96 | 6688.80 | 5574.00 |
| 3 | A9 | 214.14 | 6424.20 | 5353.50 |
| 4 | B9 | 164.43 | 4932.90 | 4110.75 |
| 5 | B10 | 182.09 | 5462.70 | 4552.25 |
| 6 | C8 | 171.22 | 5136.60 | 4280.50 |
| 7 | C9 | 171.22 | 5136.60 | 4280.50 |
| 8 | C10 | 201.22 | 6036.60 | 5030.50 |
| 9 | D10 | 150.10 | 4503.00 | 3752.50 |
| 10 | D11 | 225.93 | 6777.90 | 5648.25 |

மேற்கண்ட தொகை ரவுண்டாக வசூல் செய்யலாம்.

27.



மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ)வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| **HOD-CODE-26-02**<br>0217-Urban Development-60 Other Urban Development Scheme-800. Other receipts AT Receipts under Regularisation Charges of Unapproved layout and plots – DTCP (DPC 0217 60 800 AT 0007) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கி கணக்கில் நேரில்செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை (நிலை) எண்.172. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 13.10.17-ல் விதி எண். 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

19/6/18

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
பெரம்பலூர் மண்டலம்.

19/6/18

இணைப்பு:
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

**பெறுநர்**
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம்,
பெரம்பலூர்

**நகல்:**
1.மனுதாரர்
P. அருமைதாஸ்,
No.7 ஹெல்த் காலனி,
எடையம்பட்டி புதூர்,
திருச்சி – 620 012.

| | |
|---|---|
| 2)உதவி இயக்குநர் (நில அளவை<br>பெரம்பலூர் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும்பொருட்டு. |
| 3)சார் பதிவாளர்<br>பெரம்பலூர் சார் பதிவு அலுவலகம்,<br>பெரம்பலூர் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு. |

4) தொழில்நுட்ப வைப்பறை வரைபடத்துடன்

பெரம்பலூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்)-இன் செயல்முறைகள்

முன்னிலை : மு.முரளிதரன்

ந.க.எண். ஆ3/2441/2018 நாள் : 17.07.2018

பொருள் : **அனுமதியற்ற மனைப்பிரிவு - வரன்முறைப்படுத்துதல் - எடமலைப்பட்டி புதூர் கிராமத்தில் வசிக்கும் திரு.பெரியசாமி மகன் P.அருமைதாஸ் என்பவர் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம் - எளம்பலூர் ஊராட்சி - எளம்பலூர் கிராம புல எண்: 367/3-இல் 2 ஏக்கர் 70 செண்ட் (117612.00 சதுர அடி) பரப்பளவு உள்ள இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி உத்தரவிடுதல் - தொடர்பாக.**

பார்வை : 1.அரசாணை எண் : 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள் : 04.05.2017.

2.அரசாணை எண் : 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3) நாள் : 13.10.2017.

3.பெரம்பலூர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 710/2018/பெ.ம. நாள் : 19.06.2018

4.மனுதாரர் திரு.P.அருமைதாஸ் த/பெ.பெரியசாமி திருச்சி, எடமலைப்பட்டி புதூர் என்பவரின் விண்ணப்ப நாள் : 20.06.2018

-----------

உத்தரவு :

பார்வை 3-இல் காணும் செயல்முறைகளில், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியம், எளம்பலூர் ஊராட்சி, எளம்பலூர் கிராம புல எண்: 367/3-இல் 2 ஏக்கர் 70 செண்ட் (117612.00 சதுர அடி) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்திட தொழில்நுட்ப அனுமதி வழங்கி பின்வருமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. மனைப்பிரிவு மொத்த அளவு | : | 2 ஏக்கர் 70 செண்ட்(அ) 117612.00 ச.அடி |
| 2. மனைப்பிரிவு சாலை பரப்பளவு | : | 22014.50 ச.அடி |
| 3. பூங்கா 10.01% பரப்பளவு | : | 2564.25 ச.அடி |

மேற்காணும் விவரப்படி மொத்த பரப்பளவில் சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடு நீங்கலாக உள்ள மொத்த மனைகளான 41-இல் ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட 31 மனைகள் மற்றும் பூங்கா நீங்கலாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் காணும் மீதம் உள்ள 10 மனைகள் மட்டும் வரன்முறைப்படுத்திட வரன்முறைகட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தி பார்வை 2-இல் காணும் மனுவின் வழி இவற்றிற்கு மட்டும் வரன்முறை செய்து உத்தரவிடுமாறு உரிமையாளர் கோரியுள்ளார்.

மேற்காணும் நபர் செலுத்த வேண்டிய வரன்முறை கட்டணம் 1926 ச.மீக்கு ஒரு ச.மீக்கு ரூ.30/- வீதம் ரூ.57888/-ஐ 16.07.2018 அன்று உரிய அரசு தலைப்பில் செலுத்தியுள்ளார். எளம்பலூர் ஊராட்சி 1926 ச.மீக்கு ஒரு ச.மீக்கு ரூ.25/- வீதம் ரூ.48157/- ஊராட்சி கணக்கில் செலுத்தி அதற்கான பல்வகை பற்று சீட்டு எண் 4819 நாள் : 16.07.2018 - இன்படி செலுத்தியுள்ளார். மனைப்பிரிவில் உள்ள சாலைகள் பூங்காக்கள் உத்தரவிடப்பட்ட நாளிலிருந்து உள்ளாட்சி வசம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எனவே தனியர் கோரியுள்ளவாறு, எளம்பலூர் ஊராட்சி, எளம்பலூர் கிராம புல எண்: 367/3-இல் 2 ஏக்கர் 70 செண்ட் (117612.00 சதுர அடி) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள மனைப்பிரிவு எண்களில் பூங்கா நீங்கலாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் காணும் மீதம் உள்ள 10 மனைகள் மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளின்படி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி வரன்முறை செய்யப்பட்ட மனைப்பிரிவின் சாலைகள் மற்றும் திறவிட ஒதுக்கீடுகளுக்கான நிலங்களை ஊராட்சி பெற்றுக் கொண்டதற்கான அல்லது உள்ளாட்சி வசம் எடுத்து கொண்டமைக்கான பத்திரம் மற்றும் ஆவணங்களை வருவாய் துறை ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு தனி அலுவலர், எளம்பலூர் ஊராட்சி அவர்களால் அனுப்பப்பட வேண்டும்.
2. மனைப்பிரிவு வரன்முறை செய்யப்பட்ட நிலங்களில் வில்லங்கம் ஏதும் பின்னர் தெரியவந்தால் வழங்கப்பட்ட அனுமதி ரத்து செய்ததாக கருத்தப்படும் எனவும் தனியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

17/7/18

தனி அலுவலர்,
எளம்பலூர் ஊராட்சி
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
ஊராட்சி ஒன்றியம், பெரம்பலூர்

பெறுநர்

திரு.P.அருமைதாஸ்,
த/பெ.பெரியசாமி,
7-ஹெல்த் காலணி,
எடமலைப்பட்டி புதூர்,
திருச்சி.

நகல் : உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, பெரம்பலூர் மண்டலம்.